**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>அ.வ எண்: 231/2024 ஜெயபாலன் (பிசா1) தேதி: 28.03.2026.</u>**

**<u>பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்தின் அனைத்து ஆவணங்களும் என் கைவசம் உள்ளதா என்றால் சங்கத்தில் உள்ளது. சங்கத்தில் அந்த ஆவணங்கள் நான் செயலாளர் என்ற முறையில் என்னிடம் உள்ளது. சங்கத்தில் தீர்மாண புத்தகம், கூட்ட அழைப்பிதழ் நோட்டு, நிர்வாககுழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தின் போது வருகை தரும் உறுப்பினர்களின் வருகைப்பதிவேடு ஆகியவை எனது கட்டுப்பாட்டில் இருக்கும். இதர ஆவணங்கள் சங்க பொருளாலர் பராமரிப்பில் இருக்கும். நாடார் உறவின்முறை சங்கத்தில் இருந்து சில ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவு வழங்கப்பட்டு சங்கத்தின் செயலாளர் என்ற முறையில் நான் தான் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இத்ந வழக்கில் சங்க துனை விதிகளுக்கு எதிராக சங்கத் தேர்தல் நடந்தது என்பதுதான் பிரச்சனை என்ற விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரியும். பிசா.ஆ.5 ஆவணத்தில் கண்ட தங்கமாரியப்பன் என்பவர்தான் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். பி.சா.ஆ.5 வழக்கில் நாடார் உறவின்முறை சங்கம் அதை எதிர்த்து நடத்தாமல் தேர்தல் நடத்த சம்மதம் தெரிவித்துள்ளது என்றால் சாட்சி அந்த ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு தனக்கு சரியாக தெரியவில்லை எனக் கூறுகிறார். பி.சா.ஆ.5 வழக்கில் எந்த தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பி.சா.ஆ.5

ஆவணத்தைப் பற்றி எனக்கு தெரியாது. 2014 முதல் தற்போது வரை நாடார் உறவின்முறை சங்கத்தின் துனை விதிகளை திருத்தம் செய்வது சம்பந்தமாக பொதுக்குழுவோ அல்லது சிறப்பு பொதுக்குழுவோ நடைபெறவில்லை என்றால் 2016ம் வருடம் நடைபெற்றது. நாடார் உறவின்முறை சங்கத்தின் துனை விதிகளை திருத்தம் செய்வது சம்மந்தமாக சிறப்பு பொதுக்குழு நடந்தது. 2016ம் வருடத்திற்கு பின்னர் நாடார் உறவின்முறை சங்கத்தின் துனை விதிகள் திருத்தம் செய்யப்பட்டதா என்றால் எழுத்து பூர்வமாக செய்யப்படவில்லை. ஆனால் 2025ம் வருடம் மார்ச் மாதம் சிறப்பு பொதுக்குழு நடைபெற்று அதில் துனை விதிகள் சம்மந்தமாக தீர்மாணம் நிறைவேற்றப்பட்டு திருத்தம் செய்யப்பட்டது. 2016ம் வருடம் நாடார் உறவின்முறை சங்கத்தின் தலைவர் யார் என்றால் திரு. ராஜசேகரன் அல்லது APK பழனிச்செல்வம் இருக்கலாம். 2016ம் வருடம் நான் நிர்வாக குழு உறுப்பினராக இருந்தேன். தற்போது நாடார் உறவின்முறை சங்கத்தின் எத்தனை பேர் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் என்றால் மொத்தம் 65 நபர்களின் 2 நபர்கள் இறந்து விட்டதால் தற்போது 63 நபர்கள் இருந்தார்கள். பொதுக்குழு உறுப்பினர் யாராவது நிர்வாகக்குழுவில் 65 நபர்களுக்கு பதிலாக 80 நபர்கள் வைக்கலாம் என்று கேட்டால் அவ்வாறு அனுமதிக்கப்படுமா என்றால் இல்லை. ஏனேன்றால் சங்க துனை விதிகளில் 65 நபர்கள் மட்டுமே நிர்வாகக்குழுவில் இருக்கமுடியும் என உள்ளதால் கூடுதலாக அனுமதிக்க முடியாது. 2016ம் வருடம் தான் நிர்வாகக்குழுவில் 65 நபர்கள் என பொதுக்குழுவில் தீர்மாணம் நிறைவேற்றப்பட்டு திருத்தம் செய்யப்பட்டது. பொதுக்குழுவில் தீர்மாணம் நிறைவேற்றினால் அதை அப்படியே மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றால் சரிதான்.

2016ம் வருடம் சங்க துணை விதிகள் திருத்தம் சம்பந்தமாக பொதுக்குழு தீர்மாணத்தை மாவட்ட பதிவாளருக்கு அவ்வாறு அனுப்பி வைத்தோம் என்றால் சரிதான். மாவட்ட பதிவாளருக்கு கூட்ட அழைப்பிதழ், பொதுக்குழுவில் எத்தனை உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள், தீர்மாணத்தின் எத்தனை நபர்கள் கையெழுத்து செய்தார்கள் போன்ற விபரங்களையும் சேர்த்து அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். கூட்ட அழைப்பிதழ், தினசரி நாளிதழில் வெளிவந்த செய்தி, கூட்டத்திற்கு வருகை தந்த உறுப்பினர்கனின் எண்ணிக்கை, கூட்ட நடவடிக்கை, என்ன திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது போன்ற விபரங்களை உரிய ஆவணங்களுடன் மாவட்ட பதிவாளருக்கு அனுப்பி வைப்போம். துணை விதிகளை திருத்தம் செய்வது சம்பந்தமாக பொதுக்குழுவில் கலந்து கொண்ட நபர்களில் 2/3 உறுப்பினர்கள் தீர்மாணத்தை ஆதரிக்க வேண்டும் என்றால் சரிதான். 2016ம் வருடம் ஏற்பட்ட பொதுக்குழுவிலும் துணை விதிகள் திருத்தம் சம்பந்மாக கலந்து கொண்ட நபர்களில் 2/3 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து தீர்மாணம் நிறைவேற்றப்பட்டது என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் கலந்து கொண்டு தீர்மாணத்தில் கையெழுத்து செய்த நபர்கள் 2/3 நபர்கள் பற்றிய விபரம் வருகைப்பதிவேடு ஆவணத்தில் வரும் என்றால் சரிதான். வருகைப்பதிவேடு கையெழுத்து செய்யும் நபர்கள் தீர்மணத்தில் கையெழுத்து போடாமல் செல்லும் வாய்ப்பு உள்ளது என்றால் அநோகமாக அவ்வாறு இருக்காது. துணை விதிகளை திருத்தம் செய்வது என்பது சிறப்பு தீர்மாணம் என்றால் சரிதான், 2016ம் வருடம் நாடார் உறவின்முறை சங்கத்தின் துணை தலைவராக யார் இருந்தது என்றால் எனக்கு நியாபகம் இல்லை. 2016ம் வருடம் நடைபெற்ற சங்க துணை விதிகள் திருத்தம் குறித்த

தீர்மாணம் செல்லாவிட்டால் அதற்கு முன்பு இருந்த துனை விதிகள் தான் செல்லுபடியாகும் என்றால் எனக்கு அது பற்றிய விபரம் புரியவில்லை.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>** வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.